*சொர்ணாம்மாள் கல்வி அறக்கட்டளை*

# தரவுகள் சேகரிப்பு
# உத்திகளுக்கானப் பயிற்சி

**இடம்**

I.D.C.R.,

லொயோலா கல்லூரி, சென்னை

**நாள்**

*27 ஜுன் முதல் 01 ஜுலை வரை*

**ஏற்பாடு**

**மக்கள் ஆய்வு**

லொயோலா கல்லூரி

சென்னை

# நிகழ்ச்சி அட்டவணை

TRAINING IN ENUMERATION TECHNIQUES
*Organized by*
People Studies, Loyola College

DATES: 27 June to 1 July 2008 [5 days]
VENUE: IDCR, Loyola College

PROGRAMME

***27.06.08***

| | |
|---|---|
| 09.30 – 10.00 | : Registration |
| 10.00 – 11.00 | : Inauguration |
| 11.00 – 11.15 | : Coffee Break |
| 11.15 – 12.15 | : Social Research Methods [Dr S Rajanayagam] |
| 12.15 – 12.45 | : Lunch |
| 12.45 – 02.45 | : Workshop on Body Language [Dr David Stanley] |
| 02.45 – 03.00 | : Tea Break |
| 03.00 – 04.00 | : Body Language in Action [Prof. Suresh Paul] |

***28.06.08***

| | |
|---|---|
| 09.30 – 10.00 | : Resume' |
| 10.00 – 11.00 | : Enumeration – Marketing Point of View [Mr S V Sudhakaran, Kumudham] |
| 11.00 – 11.15 | : Coffee Break |
| 11.15 – 12.15 | : Enumeration for Marketing [Dr V Uma] |
| 12.15 – 12.45 | : Lunch |
| 12.45 – 02.45 | : Workshop on Approaches to Students [Dr Henry Jerome] |
| 02.45 – 03.00 | : Tea Break |
| 03.00 – 04.00 | : Non-Verbal Communication [Prof Amalraj] |

***29.06.08***

| | |
|---|---|
| 09.30 – 10.00 | : Resume' |
| 10.00 – 11.00 | : Enumeration for Opinion Polls [Dr S Rajanayagam] |
| 11.00 – 11.15 | : Coffee Break |
| 11.15 – 12.15 | : Enumeration – DOs and DON'Ts [Mr Joel] |
| 12.15 – 12.45 | : Lunch |
| 12.45 – 02.45 | : Workshop on Approaches to People [Dr David Raj] |
| 02.45 – 03.00 | : Tea Break |
| 03.00 – 04.00 | : Psychology of Respondents [Dr Emma, USA] |

***30.06.08***

| | |
|---|---|
| 09.30 – 10.00 | : Resume’ |
| 10.00 – 11.00 | : Enumeration – Ethnographic Point of View [Dr Joe Arun, Oxford] |
| 11.00 – 11.15 | : Coffee Break |
| 11.15 – 12.15 | : Demographic & Psychographic Perspectives [Dr Joe Arun] |
| 12.15 – 12.45 | : Lunch |
| 12.45 – 02.45 | : Workshop on Relating to People [Dr Xavier Vedam] |
| 02.45 – 03.00 | : Tea Break |
| 03.00 – 04.00 | : Enumerator - Respondent Conflicts & Resolution [Dr Joe Arun] |

***01.07.08***

| | |
|---|---|
| 09.30 – 10.00 | : Resume’ |
| 10.00 – 11.00 | : Enumeration as a People Process [Dr Joe Arun] |
| 11.00 – 11.15 | : Coffee Break |
| 11.15 – 12.15 | : Enumeration as a Craft [Dr S Arockiasamy] |
| 12.15 – 12.45 | : Lunch |
| 12.45 – 02.45 | : Workshop on Enumeration Practice [Dr Joe Arun] |
| 02.45 – 03.00 | : Tea Break |
| 03.00 – 04.00 | : Valediction |

***ORGANISING TEAM***

Dr. S. Rajanayagam, Director, PS
Dr. Joe Arun, Executive Director, IDCR
Dr. Henry Jerome, National Advisor, AICUF
Dr Uma, Filmmaker & Research Scholar

# அறிக்கை

***நாள் : 27-06-2008***

*துவக்க விழா*

*துவக்க விழாவிற்கு வருகைத்தந்த கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை ஆல்பர்ட் முத்துமாலை அவர்களையும் லீபா இயக்குநர் டாக்டர் கிறிஸ்டி அவர்களையும் நமது சொர்ணம்மாள் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் கா. பாண்டியராஜன் ஐயா அவர்களையும் நமது டாக்டர் ச. ராஜநாயகம் அவர்கள் வரவேற்றார். முதலில் லீபா இயக்குநர் டாக்டர் கிறிஸ்டி விளிம்பு நிலையில் உள்ளவர்களை தொழில் முனைப்போர் ஆக்க அதிக முயற்சி எடுத்துள்ளார்கள் அவர்கள் முதலில் கத்தரிக்காய் விலையில் ஆரம்பித்து பின்னர் லொயோலா கல்லூரியின் தரம் படிப்படியாக தேசிய முண்ணனி அளவுக்கு எவ்வளவு முன்னேறியுள்ளது என்று கூறினார். அடுத்ததாக லொயோலா கல்லூரியின் முதல்வர் டாக்டர் முத்துமாலை ஐயா அவர்கள் மிக எளிமையாக குழு மக்களின் செய்முறைகளை மிக அழகாக எடுத்துக்கூறி வங்கியில் கடன் பெற்று அதை சிறந்த முறையில் திருப்பி செலுத்துவதை வலியுறுத்திக் கூறினார்.*

*பின்னர் நமது சொர்ணமாள்ளாள் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் ஐயா அவர்கள் மிகப்பெரிய படிப்பாம் MBA, அதை சுய உதவிக் குழு பெண்களிடையே மிக எளிதாக கொண்டுச் சென்று கணக்கெடுப்புக் கருத்தாய்வுப் பற்றி உதவும் வகையில் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்.*

*அதில் அவர் கூறிய இரண்டு ஆய்வு*

- *சந்தை ஆய்வு*
- *சமூக ஆய்வு*

*இதில் பதினைந்தாயிரம் பேர் கண்க்கெடுப்பாளர்களாக உள்ளார்கள் என்றும் 1200 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்ற விவரத்தையும் கூறினார்.*

*கணக்கெடுப்பாளர்களுக்கு தேவையான நான்கு குணங்களானஅறிவு, பண்பு, திறமை, பழக்கம் ஆகியவற்றைப் பற்றி கூறினார்.*

*11.30 மணிக்கு தொடங்கிய அமர்வில் டாக்டர் ச. ராஜநாயகம் அவர்கள் ஒரு அரசியல் தேர்வு ஆய்வு மூலம் கணக்கெடுப்புக் கருத்துக் கூறினார். மக்களை ஆய்வு செய்வது எந்தெந்த துறையில் ஆய்வு செய்கிறார்கள் என்பதையும கூறினார். 1. அரசியல், 2. தேர்தல், 3. சமூகம், 4. சந்தை, 5. கல்வி*

*ஓட்டு மொத்த தகவல்கள் தருபவர்கள் யுனிவர்ஸ் என்றும் தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் மூலம் தகவல்கள் சேகரிக்கும் தகவல் ரெப்பரசண்டேட்டிவ் சேம்பிள் என்றும் கூறினார்.*

*அமெரிக்காவின் ஜனத்தொகை உலகத்திலே மூன்றாவது இடம் என்றும், 1233 பேர்களிடம் கருத்துக் கணிப்பு செய்யப்பட்டது என்றும் கூறினார்.*

*01.00 மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு தொடங்கிய அமர்வில் நாங்கள் எல்லோரும் உள்ளே வந்தோம். யாரோ ஒருவர் அமர்ந்து எதையோ பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர்தான் தெரிந்தது அவர்தான் டாக்டர் ஸ்டான்லி ஐயா அவர்கள் என்று. பின்னர் எல்லோரையும் வட்டமாக அமர்த்தி முதலில் பாட்டுப்பாடச் சொன்னார். ஆவர் கூறியதும் எல்லோரும் தயங்கினார்கள். ஆனால், பாக்யலெட்சுமி என்பவர் மிக அழகாகவும் மிக இனிமையாகவும் பாடினார். பின்னர் எல்லோரும் பொதுவாக கதை சொல்லுங்கள் என்று சொன்னால் ஒவ்வொரும் ஒரு தனிக்கதையைதான் சொல்லுவார்கள். ஆனால், எல்லோரையும் ஒரே கதையை கூற வைத்த பெருமை அவரைச் சாரும். பின்னர் பெயர்களை வலப்புறமாகவும் இடப்புறமாகவும் கூறச்செய்து மனதில் பெயர்களை பதிய வைத்தார். பின்னர் நம்முடைய சின்ன வயது விளைாட்டை ஞாபகப்படுத்தும் விதத்தில் ஒரு விளையாட்டை விளையாடச் செய்தது உடல்மொழி பயிற்சிப்பற்றி ஒருசில எடுத்துக் காட்டுக்களையும கூறி பின்னர் விடைப்பெற்றார்.*

*03.00 தேநீர் இடைவேளைக்குப்பிறகு கல்லூரியின் ஆசிரியர் சுரேஷ்பால் அவர்கள்* (VISCOM) *உடல்மொழி பயிற்சி கூறினார். அதில் சில.*

*பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப்பிறகு நம்முடைய எண்ணத்தை மற்றவர்களுக்கு நிறைவேற்ற முடியும் என்று கூறினார். உடல்மொழிப் பயிற்சி எடுக்க வேண்டும் என்றும், முகபாவங்களைப்பற்றியும் கூறினார். முகபாவங்கள் எத்தனை என்றால் ஒன்பது என்று கூறினோாம் ஆனால் 10000 விதமான முகபாவங்கள் உள்ளன என்றும் அதைப்பற்றி பால் எட்கார்ட் என்பவர் 10000 விதமான புகைப்படங்கள் எடுத்துள்ளார் என்றும் கூறினார். முகபாவங்களை வைத்து ஒரு புத்தகம் எழுதப்பட்டுள்ளது. அந்தப் புத்தகத்தின் பெயர் (*Atlas of Human Face*).*

*ஒருவர் பேசும்போது கைகட்டி பேசக்கூடாது என்றும் அதை பயத்தை பிரதிபலிக்கும் என்றும் கண்களைப் பார்த்து பேச வேண்டும் என்றும், கண்களைப் பார்த்து பேசும்போது அவர்களின் எண்ணம் புரிந்து விடும் என்றும் கூறினார்.*

*1. கணப்பொழுது கண்டறிதல்*
*2. நுட்பாமான கணப்பொழுது கண்டறிதல்*

*வார்த்தைகள் இல்லாத மொழி* (Non Verbal Communication) *40% பேச்சை நம்புகிறார்கள் என்றும 60% தோற்றத்தை நம்புகிறார்கள் என்றும் கூறினார்.*

*பகுத்தறிவு மனம் - நமக்குத் தேவையான விசயங்களை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளும்* (Cultural of Silence)

*பல்வேறு கலாச்சாரங்கள் மூலம் நம்முடைய உடல்மொழி பாதிக்கிறது என்று பலவகையான விசயங்களை மிகவும் எளிமையாகவும், மிகுந்த ஆர்வத்துடனும் எடுத்துக் கூறினார்.*

*ஞாபகம் வைத்துக் கொள்ளும் பயிற்சி*

1. *காட்சி ரூபமாக ஞாபகம் வைத்தல்*
2. *தொடக்கம் அதற்கு ஒரு உருவாக்கம்*
3. *திரும்பத்திரும்ப படிப்பது 3 மணிக்கு ஒரு முறை இடைவேளை.*

*அறிக்கை தயாரிப்பு : அயனாவரம் கிளை*
R. *சுபத்ரா*
J. *உஷாராணி*
*பாரதி*
*சத்யவாணி*
*மகேஸ்வரி*
*ராஜேஸ்வரி*
*சசிகலா*
*பத்மாவதி*
M. *லெட்சுமி*
G. *நாராயண நிவாஸ்*
U. *சசிகுமார்*
S. கோபி
C.V. *பாத்திமா*
A. *பரிமளா*
V. *நித்யா*

***நாள் : 28-06-2008***

*9.30 மணியளவில் இறைவணக்கத்துடன் பயிற்சி துவங்கப்பட்டது.*

*9.30 முதல் 10.00 மணி வரை முதல் நாள் பயிற்சியின் நிகழ்ச்சி மற்றும் வகுப்புகள் குறித்து அயனாவரம் கிளையினர் முதல் நாள் அறிக்கையை வாசித்தனர்.*

*10.00 அமர்வு: சினிமா மற்றும் பக்தி இதழ்களின் மேலாளர் திரு சுதாகர் ஐயா அவர்கள் சந்தை ஆய்வு பற்றியும் சந்தை தொடர்பான தகவல்களை சேகரிப்பது எப்படி என்பதையும் இளைஞர்களின் கருத்து ஆய்வு பற்றியும் மார்க்கெட்டிங் என்றால் என்ன, எப்படி செய்வது அதன் தகவல்கள் எப்படி அறிவத என்பதைப்பற்றி மிகவும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார். ஒரு பொருளை விற்பதன் அடக்கவிலை என்பது மூலப்பொருட்கள், உற்பத்தி செலவு, சம்பளம், இதரச்செலவுகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று விளக்கி கூறினார்.*

*11.15-12.30 அமர்வு: தேநீர் இடைவேளைக்குப் பிறகு டாக்டர் உமா அவர்கள் வர்த்தக ஆய்வு குறித்து விளக்கினார். தரம் சார்ந்த ஆய்வு, விளக்கம் தரக்கூடிய ஆய்வு என்பதைப்பற்றி விளக்கினார். நுகர்வோர், புவியியல் சார்ந்த காரணிகள், பகுதி விவரங்கள், நகர விவரங்கள், பருவ நிலைகள், அடர்த்தி போன்ற விளக்கங்களை மிகவும் தெளிவாக விளக்கி கூறினார்.*

*சமூகப் பண்பாட்டு விவரங்கள் மற்றும் பயன் சார்ந்த விவரங்கள் குறித்தும் விளக்கம் அளித்தார். தேவைகள் மூன்று வகைப்படும். 1. தொடக்க நிலை, 2. உயர்நிலை, 3. தேவைக்கேற்ப நிலை என்ற மூன்று வகை நிலைகளை தெளிவாக எடுத்துக் கூறினார். மேலும், பொதுவான கொள்கை மற்றும் பொருள் சார்ந்த கொள்கை குறித்தும் விளக்கப்பட்டது.*

*மதிய உணவு இடைவேளைக்குப்பிறகு தொடங்கிய அமர்வில் டாக்டர் ெ"ன்றி ஜெரோம் அவர்கள் தகவல் சேகரிப்பின் போது மாணவர்களை எப்படி அணுகுவது என்பது குறித்து விளக்கமளித்தார்.*

*1980-களில் ஏற்பட்ட மாற்றம் குறித்து,*
*"அநீதியான சமுதாயத்தில் பிறந்து விட்டோம் இதை அப்படியே விடமாட்டோம்"என்பதை உறுதியாக கூறினார். கருத்தாய்வில் கலந்து கொண்டவர்களை 10 குழுக்களாகப் பிரித்து "80களில் மாணவர்கள்" என்ற புத்தகத்தினை அனைவருக்கும் கொடுத்து 10 குழுக்களுக்கும் தனித்தனி பகுதிகளை பிரித்து கொடுத்து அதிலிருந்து 3 முக்கிய கருத்துக்களை கூற செய்தார். மேலும் 1980 முதல் 2008 வரை உள்ள மாற்றங்களையும் அறிய செய்தார். மேலும், அவர் எங்களிடையே உள்ள கருத்துக்களை எங்களுக்குள்ளேயே பரிமாறிக் கொள்ளச் செய்தது மிகவும் பிடித்தமானதாக இருந்தது.*

*இரண்டாம் நாளின் கடைசி அமர்வினை காட்சித் தகவலியல் பேரா. திரு அமல்ராஜ் ஐயா அவர்கள் வார்த்தைகளில்லா தகவல் தொடர்பு குறித்து விளக்கமளித்தார். வுார்தைையே இல்லாமல் ஒரு செய்தியை மற்றவர்களுக்கு எவ்வாறு தெரிவிக்க வேண்டும் என்பதையும் எண்ணங்கள், உணர்வுகள், கண்ணோட்டம் என்பது குறித்தும் விளக்கமளித்தார்.*

*துகவல் தொடர்பின் பல்வேறு பரிமாற்றங்களை அதாவது,*

- *நேர்முக தகவல் பரிமாற்றம்*
- *வெகுஜன தகவல் பரிமாற்றம்*
- *ஒரு வழி தகவல் பரிமாற்றம்*
- *இரு வழி தகவல் பரிமாற்றம்*
- *வுார்த்தை மொழி*
- *உடல் மொழி*
- *சுய சிந்தனை*

*போன்ற தலைப்புகளில் தகவல்களை எவ்வாறு பரிமாறிக் கொள்வது குறித்தும் மிகவும் எளிமையான முறையில் நாங்கள் அனைவரும் புரிந்து தெரிந்துக் கொள்ளும் அளவில் எடுததுரைத்தார். மேலும் ஒரு செயலை வார்த்தையின் மூலம் விவரிக்காமல் செயல்களின் மூலமாக மற்றவர்கள் எப்படி புரிந்து கொள்வார்கள் அதனை புரிந்துக் கொண்டு மற்றவர்கள் அதே செயலின் மூலம் மற்றவர்களுக்கு எப்படி விளக்குவார்கள் என்பதை நான்கு நபர்களின் மூலமாக நடித்துக் காட்டச் செய்த விதம் எங்களை மிகவும் கவரச் செய்தது. மேலும் :- சொர்ணம்பாள் கல்வி அறக்கட்டளையின் ஒவ்வொரு கிளையின் மூலம் ஒவ்வொருவராக தேர்ந்தெடுத்து சுய உதவிக் குழுவின் விளக்கம் குறித்து கலந்துரையாடல் நிகழ்ச்சி மூலமாக விளக்கப்பட்டது. மேலும் நான்கு மாணவர்களின் மூலம் வாக்காளர் கணக்கெடுப்பு செய்வது எப்படி என்று கலந்துரையாடல் செய்யப்பட்டது.*

*அறிக்கை தயாரிப்பு:*

மேத்தா நகர் கிளை (அண்ணா நகர்)
M.கோமதி
M. தனம்
S. சத்யா
A. ஸ்ரீதேவி
J. ஜெயலலிதா
S. செல்வராணி

***நாள் : 29-06-2008***

*பங்கேற்பு: சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும பணியாளர்கள் காலை **9.45**-க்கு இறை வணக்கத்துடன் எமது பயிற்சி ஆரம்பமானது. மேத்தா நகர் கிளை பணியாளர் திருமதி சத்தியா அவர்களால் இரண்டாம் நாள் பயிற்சி அறிக்கை வாசிக்கப்பட்டது. ஆறிக்கை மதிப்பீடு செல்வி ஸ்டெல்லா அவர்களால் நடத்தப்பட்டது. புங்கேற்பாளர்கள் கூறிய விடுபட்ட கருத்துக்கள் அறிக்கையில் சேர்க்க ஆலோசனை வழங்கப்பட்டது. அறிக்கை நன்றாக இருந்தது குறித்து பாராட்டப்பட்டது.*

*அருட்தந்தை ராஜநாயகம் ஐயா அவர்கள் முதல் அமர்வை துவக்கி நடத்தினார்கள் இதில் அரசியல் ஆய்வு மூன்று வகைப்படும். அவை:*

*1. மக்களை மையப்படுத்திய அரசியல் ஆய்வுகள்*
*2. கட்சியை மையப்படுத்திய அரசியல் ஆய்வுகள்*
*3. ஊடகங்களை மையப்படுத்திய ஆய்வுகள்*

*நாட்டின் வளங்கள் சமச்சீராக பகிர்ந்தளிக்கப்படவில்லை. எல்லா மட்டங்களிலும் அரசியல் இருக்கு ஆனால் மக்களின் நலன்களை மையப்படுத்திய ஆய்வுகள் மிக குறைவு.*

கணக்கெடுப்பாளர்களுக்கு அரசியல் பற்றிய அடிப்படை அறிவு, கட்சிகள், அடிப்படை கொள்கைகள், அணுகுமுறைகள் பற்றி தெரிதல் அவசியம். இதற்கு நாம் தினசரி 10 நிமிடம் செய்திதாள் படிக்கும் பழக்கம், தொலைகாட்சியில் செய்திகளை முக்கியத்துவம் கொடுத்து பார்க்க வேண்டும். நாம் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற முறையில் நாம் ஓட்டுப்போட்டு தெரிந்தெடுத்த பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க தவறக்கூடாது. புத்திக்கை மூலம் நாம் பொது அறிவை வளர்ப்பதோடு முக்கிய கருத்துக்களை குழுக்களில் கூட விவாதிக்கலாம். நம் உணர்வுகளை பத்திரிக்கை ஆசிரியருக்கு நாம் எழுத தவறக்கூடாது (example:) விலைவாசி உயர்வு என்றால் அதற்கான காரணம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும். நாம் கட்சி சாராதவராக கூட இருக்கலாம். அரசியல் அறிவு இருந்தால் சூழ நிலைக்கு ஏற்ப நம்மை மாற்றி கொள்ளலாம்.

தந்தை அவர்கள் ஆய்வு பற்றி பேசும்போது சேம்பிள் தேர்வு ஒட்டு மொத்த கருத்தை பிரதிபலிக்க வேண்டும். ரேண்டம் அணுகுமறை மாவட்டம் அல்லது தொகுதி அல்லது பூத் அடிப்படையில் தேர்வு செய்யலாம். குறைகளும் நிறைகளும் இந்த அணுகுமுறைகள் இருக்க வாய்ப்புண்டு. வாக்காளர் பட்டியல் சரியில்லை, வீட்டில் ஆள் இருக்காது ஒத்துழைப்பு சரியாகத் தரமாட்டார்கள் இதுமாதிரி பிரச்சனைகளை எப்படி சமாளிப்பது என்று சிந்தித்து வாருங்கள். கன்வினியண்ட் சேம்பளிங் வசதிக்கேற்ற அணுகுமுறையின் மூலம் தகவல் சேகரிக்கலாம் என்று கூறினார்கள்.

தேநீர் இடைவேளைக்குப்பின் திரு. ஜோயல் போஸ், முதுநிலை மேலாளர் அவர்கள் கணக்கெடுப்பில் செய்யக்கூடியது, செய்யக்கூடாதது குறித்து வகுப்பு நடத்தினார்கள்.
அறிவு பெற்று உணர்வு நிலைக்கு கொண்டு வந்து ஏன், எப்படி, என்று ஆராய்ந்து தெளியும் நிலைதான் விழிப்புணர்வு என்று சுட்டி காட்டினார். பின் ஆறு குழுக்களாக கிளை அடிப்படையில் பிரித்து ஒவ்வொரு குழுக்களும் 10 கருத்துக்கள் கணக்கெடுப்பில் செய்யக்கூடியது, செய்யக்கூடாதது என குழு ஆய்வு செய்யப்பட்டது.

செய்யக்கூடியவை:

- சரியான நபர்களை தேர்வு செய்வது
- நாம் எதற்கு கருத்துக்கணிப்பு என்பதைப்பற்றி விளக்கம் அளித்தல் அவசியம்
- புதில் பேச பொதிய நேரம் கொடுத்தல் அவசியம்
- முறையான கேள்விகளை புரியும்படி கேட்க வேண்டும்
- மக்களுக்குத் தெரிகின்ற மொழியில் கெள்வி கேட்க வேண்டும்
- ரகசியங்களை பாதுகாக்க வேண்டும்
- நம்பிக்கைக்கு உரியவர்களாக இருத்தல் வேண்டும்
- கோப்பட்டால் கூட நாம் பொறுமையாய் இருக்க வேண்டும்
- நேரம் காலம், சூழ்நிலை தெரிந்து சர்வே எடுக்க வேண்டும்

செய்யக்கூடாதவை:

- கவனம் சிதறக்கூடாது
- பிரச்சனைகள் வருகிறமாதிரி கேள்வி கேட்க கூடாது
- அவர் பக்கத்தில் வைத்து எழுதுவதை கூட தவிர்க்கலாம்
- அவர்களுடைய நேரத்தை அதிகமாக விரயமாக்க கூடாது

இப்படி பல்வேறு கருத்துக்கள் குழுவினரால் தொகுத்து வழங்கப்பட்டது. சிந்தனை தெளிவு ஏற்பட்டது.

4P - Place, Product, Price, Promotion என விளக்கியதோடு 3S - Sense, (உணர்வுபூர்வமாக), Serve- (வேலை, பணிசெய்தல்), Satisfy (திருப்திபடுத்துதல்) அவசியம் என விளக்கினார்கள்.

மதிய உணவு இடைவேளைக்குப்பின் டாக்டர் டேவிட்ராஜ் அவர்கள் மக்கள் அணுகுறை என்றால் என்ன என்பது பற்றி வகுப்பு நடத்தினார்கள். மக்கள் அணுகுமுறை அமைப்பு , கலாச்சாரம், மொழி, பண்பாடு குறித்து வித்தியாசப்படும். நாம் கருத்துக்கணிப்பு செய்யும்போது ஒரு நபர் கருத்துக்கணிப்பா, குழு கருத்துக்கணிப்பா என்பதை நாம் தெளிவுப்படுத்தி, இவர்களிடம் பேசிவிட்டு உங்களிடம் பேசுகிறேன் என சூழ்நிலையை சமாளித்து குறிப்பிட்ட நபர் கருத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

சர்வே எடுப்பவர் அமைதியாக இருக்க மன ரீதியாக நாம் நம்மை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் சூழ்நிலை புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு நாம் கேள்வி கேட்க வேண்டும்.

பின் 6 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் இரண்டு படம் வீதம் கொடுத்து ஒவ்வொருவரிடமும் அதைக் குறித்து கருத்துக்கணிப்பு செய்யப்பட்டது. குழுவில் மிக ஆர்வத்துடன் எல்லோரும் படங்களை உற்றுநோக்கி கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

நாம் படத்தை பார்க்கும் கோணத்தில் வித்தியாசமாக பொருள்படுவதை போன்று சமுதாயத்தை நாம் சரியாகப் பார்க்க தவறும்போது வித்தியாசமான சூழல், மாற்றங்கள் நிகழ்ந்துக் கொண்டே இருக்கும். நாம் இவற்றை கவனிக்க தவறக்கூடாது கருத்து திணிக்க கூடாது. சம நிலையில் இருந்து எல்லா கருத்தக்களையும் கவனிக்க வேண்டும் என்று கூறினார்.

மதியம் தேநீர் இடைவேளைக்கு பின் டாக்டர் எம்மா அவர்கள் உளவியல் ஆற்றுப்படுத்தல் பற்றிய வகுப்பு நடத்தினார்கள்.

நாம் எதை தொடர்பு படுத்தி பார்க்கிறோமோ அதன் அடிப்படையில் எண்ணங்கள், செயல்கள் மாறும். நாம் பல சூழ்நிலைகளில் நம்மைப்பற்றி பிறருக்கு நல்ல எண்ணம் ஏற்பட வேண்டும் என்று நினைக்கின்றோம். சுற்றுச்சூழல் எப்படி மனமாற்றம் , பதில்மாற்றம் ஏற்படுத்துகின்றது. சிலர் கேள்வி கேட்பார்கள் ஆனால், பொறுப்பில்லாமல் போவார்கள்.

உளவியல் அடிப்படையில் கேள்வி கேட்டு சரியான பதில் கூறுகிறார்களா என்பதை நாம் கண்டுகொள்ள முடியும். உடனடியாக பதில் கிடைத்தால் ஓரளவு சரியாக இருக்கும். மேலேப்பார்த்து இடது பக்கம் பார்த்தால் உண்மை, மேலே போய் கண் வலப்பக்கம் பார்த்தால் சிறிது பொய், கீழ்(தரை) பார்த்தால் முழுவதும் பொய் பேசுவது புலனாகும்.

ஒரு காரியத்தை ஏற்கனவே முடிவு செய்துவிட்டால் அந்த எண்ணத்தை மாற்றுவது கடினம். நுடந்த செயல் சிந்தனை, உணர்வு, முகபாவனைத் தோற்றம், கலாச்சாரம், இடம், சூழல் போன்றவற்றால் வித்தியசமான விளைவுகளை ஏற்படுத்த தோன்றும். ஆய்வில் உண்மை முக்கியம். நிற்பது, பேசுவது உடல்நிலை, மனநிலை எல்லாம் அய்வில் முக்கியமென தொகுத்து கூறியது சிறப்பாக இருந்தது.

சகோ. ஆடைக்கலம் இடைஇடையே உறுப்பினர்களை உற்சாகப்படுத்தி நன்றி கூற, பயிற்சியாளர்களை உற்சாகமாக பங்கேற்க செய்ததும், பயிற்சியை ஒருங்கிணைத்த விதம் சிறப்பாக இருந்தது. திரு ஜார்ஜ் அவர்கள் தினம் உறுப்பினர் பெயரையும் பதிவு செய்தார்.

அறிக்கை தயாரிப்பு

துறைமுகம் கிளை
செல்வி ஸ்டெல்லா
திருமதி கவிதா
திருமதி ஜெயந்தி
திருமதி வசந்தா
திருமதி ஸ்ரீதேவி
திருமதி எல்சி டேவிட்
திருமதி தங்கம்
திருமதி மலர்விழி
திருமதி சுப்புலெட்சுமி

**நாள் : 30-06-2008**

காலை 10 மணியளவில் கடவள் வாழ்த்து கூறப்பட்டது. பிறகு, துறைமுகம் கிளை அவர்கள் மூலம் அறிக்கை வாசிக்கப்பட்டது. நல்ல முறையில் பயனள்ளதாகவும் வாசிக்கப்பட்டது. அதில் நாங்கள் எழுதி விட்ட கருத்துக்களை கூட நாங்கள் எழுதி தெரிந்து கொள்ள பயனள்ளதாக அமைந்தது.

10.30 மணி அளவில் டாக்டர் ஜோ அருண் அருட்தந்தை மானுட ஆய்வியல் வல்லுநர் அவர்களை அருட்தந்தை ராஜநாயகம் அறிமகப்படுத்திச் சென்றார். பிறகு முடிவு வைத்து சர்வே எடுக்க கூடாது.

அடிப்படை ஆய்வு
1. கண்ணோட்டம் ( றுழசடன ஏநைற)
2. பண்பாடு (ஊரடவரசந)
3. மொழி (டுயபெரயபந)
இனவரைவியல் ஒரு சமூகம் உருவாவதற்கும், அழிவதற்கும் கண்ணோட்டம் மிக முக்கியம் என்று கூறினார்.

ஐரோப்பியர் சிந்திப்பதற்கும், நாம் சிந்திப்பதற்கும் வித்தியாசங்களை கூறி அதற்கு இரண்டு விளக்கங்களை கொடுத்து ஐரோப்பியர்கள் என் காசு, என் உழைப்பு என்று கேட்பர் அவர் தனிப்பட்ட தன்மையை குறிக்கிறது. ஆனால், நாம் சமூக தன்மை உள்ளவர்களாக இருக்கின்றோம். உதாரணம் ஏம்மா இவர்கள் ஊழல் பண்றாங்க இவங்களுக்கு ஓட்டுப்போடுறீங்களே என்று கூறி அவர்கள் எங்கள் பணத்தை எடுக்கவில்லை என்று கூறுவார்கள்.

பண்பாடு
1. பண்பாடு என்பது நாம் எப்படி உணர்கிறோம்
2. பண்பாடு என்பது நாம் எப்படி சிந்திக்கிறோம்
3. பண்பாடு என்பது நாம் எப்படி கொண்டாடுகிறோம்
இவை வாழ்வின் பண்பாடு.

பண்பாடு என்பது வாழ்க்கையில் கண்ணோட்டம்
1. கூடி செயல்படுவது
2. கூடி கொண்டாடுவது

திருநெல்வேலியில் வாழும் மனிதருக்கும் சென்னையில் வாழும் மனிதருக்கும் வேறுபாடு இருக்கிறது. புண்பாடு மாறுபடும். ஏனென்றால் (sub culture) உள் பண்பாடு எல்லோரையும் ஒட்டுமொத்த பண்பாடு என்று கூற முடியாது என்று கூறி நீங்கள் சிந்திக்கிற சிந்தனையிலும், உங்களுக்கு இருக்கிற சிந்தனையும் சரியாக பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

மொழி

பார்க்கிற விஷயத்தை சொல்லுவதற்கு மிக முக்கியம் மொழி கருத்தாய்வு கேட்கும் போது அவர்களுடைய எண்ணங்கள், முகபாவனை, அழுத்தம், சொல், விரக்தியுள்ள பேச்சு இவற்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

சின்ன சின்ன கதை பேசி பிறர் வாழ பல செய்கை செய்து நான் வாழும் மானிடர் போல் இருப்பனோ இல்லை வீழ்வேன் என நினைப்பேனோ

தேநீர் இடைவேளைக்குப் பிறகு பங்கேற்பாளர்களிடம் மூன்று கேள்விகள் கொடுக்கப்பட்டு அதற்கு அதை ஒவ்வொருவரும் தனித்தனியாக யோசித்து ஆய்வு செய்து சில கருத்துக்களை எடுக்க வேண்டும். பிறகு நான்கு பேர்

கொண்ட குழுவாக யோசித்து எடுக்கப்பட்ட கருத்துக்களை ஒன்று சேர்ந்து அதை 10 பாய்ண்ட்டாக எழுத சொல்லி கூறினார்.

கேள்வி

1. தமிழ் பண்பாட்டின் தன்மைகள் எவை?
2. மொழி அழிந்தால் ஒரு இனம் அழியுமா?
3. சமூகம் மேன்மை பெற பத்து வழிகள் கூறவும்

குழு ஆலோசனைக்குப்பிறகு மதிய உணவு இடைவேளை விடப்பட்டது.

முதிய உணவு இடைவேளைக்குப்பிறகு தொடங்கிய அமர்வினை டாக்டர் சேவியர் வேதம், சமூகவியல் துறை வல்லுனர் மக்களை அணுகுமுறை குறித்து விரிவாக எடுத்துக் கூறினார்.

1.முதலில் நம்ம நம்மளையே நம்பனும்
2.தகவல் சேகரிக்கும் போது தன்னை நாமே நம்பனும்
ஒரு கடவுள் கதை கூறினார். நான் உன்னோட இருக்கிறேன் எதையும் செய்வதற்கு 1. நம்பிக்கை, 2. கடவுள் செயல்.

நம் பிள்ளைகளுக்கு தெய்வ பக்தி வளரணும். தெய்வ பக்தி வளரனும். தெய்வ பக்தியோடு அணுகும்போது தான் எல்லா காரியம் நடக்கும். சுத்தமாக போகணும்.

என்னால முடியும், நாமட்டும் இல்லை இறைவனுடைய சித்தம் நடக்கும். ஏன்னுடைய மனநிலை எப்படி இருக்கிறது. 300 பேரையாவது சந்தித்து விருப்பு, வெறுப்புகளை தெரிந்து ஒரு வினாப்படிவம் உருவாக்க முடியும். பேசிவிட்டு இருக்கும்போது எந்த காரியத்திற்கு வந்தோமோ அதை மனதில் வைத்து பேச வேண்டும்.

சமூகப் பிண்ணனி தெரிந்து வைத்து கொள்ள வேண்டும், சிந்தனை ஆற்றல் வளர்க்க வேண்டும்.

"மனுஷங்கடா நாங்க மனுஷங்கடா
உன்னப்போல என்னப்போல
எட்டு ஜானு உயரமுள்ள
மனுஷங்கடா நாங்க மனுஷங்கடா"
என்ற பாடலை பாடி அதன் ஆழமான கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

மற்றவர்கள் மனம் நோகும்படி பேசக்கூடாது. நாம் பேசும்போது மதிப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டும். அனுபவங்கிறது படிச்சா மட்டும் வராது. துகவல் தயாரிக்கும் அவர்களுக்கு தெரியாது. தெரிந்தபடி அவர்களை கேட்க வேண்டும். ஒரே வார்த்தைக்கு அர்த்தங்கள் வேறு. மோழி அறிந்து கொள்ளாதவர்கள் தகவல்களை சேகரிக்க முடியாது.

தேநீர் இடைவேளைக்குப்பிறகு தொடங்கிய அமர்வில் தன்மை, வளர்ச்சி, இனம்/மொழி ஆகியவற்றை காலை அமர்வின் தொடர்ச்சியாக நடத்தினார் டாக்டர் ஜோ அருண் அவர்கள்.

மக்களோடு பேசும்போது அவர் பேசுகிற பேச்சை அப்படியே நம்ப கூடாது. எந்த கேள்வி கேட்டாலும் ஏன், எதற்கு சொல்கிறான் என்று சிந்திக்க வேண்டும். யார், எங்கே, எப்போது, எதற்காக சொல்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்.

திறமை என்பது வேறு திறன் என்பது வேறு. ஒவ்வொருவரைப் பற்றி பின்புலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

முன் தகவல் தயாரிப்பு ___ Information
முன் தகவல் தயாரிப்பு இல்லாமல் எந்த இடத்திற்கும் போக கூடாது
யாருமே எங்கேயும் கேட்கும் போது அவர்களுடைய தவறுகளை சுட்டி காட்ட கூடாது.
யார் சமூக அக்கறை உள்ளவர்களிடத்தில் தகவல்கள் சேகரிக்க முடியும்

பங்கேற்பாளர்களின் வேண்டுகோளுகிணங்க அவர் பாடல்களைப் பாடி முடித்தார்.

அறிக்கை தயாரிப்பு

சேப்பாக்கம் கிளை
பெனிடா
மல்லிகா
ஜோதி
பாக்கியலட்சுமி
ஸ்டாலினி
வளர்மதி
வீனா
கலைச்செல்வி

**நாள் : 1-07-2008**

இன்றைய வகுப்பு எடுத்தவர் முனைவர் ஜோ அருண் அவர்கள். காலை 9.30 மணியலவில் பயிற்சி இனிதே துவங்கியது. 30.07.08 அன்று நடந்த பயிற்சியின் அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் பயிற்சி துவங்கியது.

பொறுமை, நம்பிக்கை, விடாமுயற்சி, விவேகம் இவை அனைத்தும் ஆய்வாளர்க்கு தேவை என்றும் புதிய சிந்தனை, புதிய திட்டம், புதுமையாக

செய்ய வேண்டும் என்று கூறினார் ஆய்வாளர்களுக்கு உதவியாளர்கள் தான் கருத்து சேகரிப்பவர்கள் என்றும், மக்களுக்கு நல்ல திட்டங்களை உருவாக்குபவர்களாக கருத்து சேகரிப்பவராக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மக்களிடம் நேரடியாக கருத்து சேகரிப்பது, மறைமுக கருத்து சேகரிப்பவர் என்று இருவகை உள்ளதை கூறினார். ஆய்வு என்பது ஒரு பிரச்சனையை ஆய்வு செய்து அந்த ஆய்வை அறிவு சார்ந்த விதத்தில் சரியாக பயன்படுத்துவது ஆய்வு ஆகும்.

தெளிவான பார்வையோடு தெளிவான சிந்தனையுடன் உற்சாகமாக மக்களுக்கு நம்பிக்கையூட்டுபவர்களாக செல்ல வேண்டும். தடுக்க முடியாத அன்போடு செல்லவேண்டும் என்று அருமையாக கூறினார்.

மாணவர்கள், அலைபேசி இவ்விரண்டையும் வைத்து அலைபேசியும் மாணவர்களும் பற்றிய ஆய்வு என்ற தலைப்பை வைத்து பயிற்சி எடுத்தார்.

ஆண்\ பெண் சென்னை \ வெளியூர்
குடும்ப பிண்ணனி இவற்றுடன் நான்கு வினாக்களை கொடுத்து அனைவரையும் காலேஜ் வளாகத்தில் அனுப்பிவைத்தார்.

1 . அலைபேசி சொந்தமானதா? ஆம் \இல்லை.
2 . அலைபேசி கல்லூரிகளுக்குள் பயன்படுத்துவது ... சரி \ தவறு.
3 . அலைபேசி பண்பாடு மாணவர்களுடைய வளர்ச்சிக்கு உதவுகிறதா \ இல்லையா?
4 . மாணவர்களுடைய ஒழுக்க கேட்டிற்கு அலைபேசி உதவி செய்கிறது \ உதவி செய்யவில்லை (எப்படி) மேற்கண்ட வினாக்களுடன் பயிறசியாளர்கள் அனைவரும் ஆய்வு செய்து அதனை கட்டுரை வடிவமைத்து கொடுத்தோம் அவரவர் கணிப்பு பற்றியும் எழுதி கொடுத்தோம்.

முத்தாய்ப்பான அணுகு முறைகள்
1 . சூழல்
2 . பிண்ணனி
3 . மொழி
4 . கதையாடல்
5 . மறுபரிசீலனை செய்து நிலை நிறுத்த வேண்டும்
என்பதை மிக அழகாக எடுத்து கூறினார்.

பிறகு தகவல் சேகரிப்பாளர் நடைமுறையில் செய்ய வேண்டியவைப் பற்றி எடுத்துரைத்தார். அவை:
1. நாம் தொழில் ரீதியாக எந்த அமைப்பு அழைக்கிறதோ அந்த அமைப்புக்கு நாம் பணி செய்ய வேண்டும்.
2. களத்தில் இறங்கி தகவல்களை சேகரித்துக் கொடுப்பது

3. வினா, வினாத் தொகுப்பு இதை மையமாக வைத்து தகவலை சேகரிக்க வேண்டும்.
4. இந்த வினாத் தொகுப்பை எந்த ஏரியா விற்பனைத் தொடர்பானதா, விற்பனையை மேம்படுத்துவதா, பொதுவான அரசியல் ஆய்வா, சாத்தியங்கள் என்ன என்பதை வாசித்துப் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும்.
5. வினா - தொகுப்பு பேட்டி எடுக்க மிகவும் உதவியாக இருக்கும் வரிசை முறையில் கேள்வி கேட்க வேண்டும். அந்நியப்பட்டு இருக்க கூடாது என அனைத்து விவரங்களையும் எளிய முறையில் தெளிவாக எடுத்துக் கூறினார்.

நமது சொர்ணம்பாள் கல்வி அறக்கட்டளையின் அறங்காவளார் திருமதி லதா மேடம் அவர்கள் தலைமையிலும், முனைவர் ஜோ அருண் அவர்கள் முன்னிலையிலும் அருள் தந்தை முனைவர் ராஜநாயகம் அவர்கள் முன்னிலையிலும் நமது சீனியர் மேனேஜர் திரு ஜோயல் சார் அவர்கள் அனைவரையும் மிக அழகாக வரவேற்று பேசினார்.

திருமதி லதா மேடம் அவர்கள் பேசுகையில் பெண்கள் குறைவாக படித்திருந்தாலும், பொது அறிவு , தனக்கென ஒரு தொழில் செய்து வாழ்க்கையில் அனைவரும் உயரவேண்டும் என்று பேசினார்.

மேடம் அவர்களும் சீனியர் மேனேஜர் அவர்களும் அனைவருக்கும் சர்டிபிக்கேட் வழங்கினார்கள் .அனைத்து கிளையின் பணியாளர் அனைவரும் நன்றி கூறினார்கள்.

முனைவர் ராஜநாயகம் அவர்கள் எழுதிய “சிலிர்ப்பு” கதை புத்தகமும் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது

இறுதியாக பயிற்சிக்கு இடம் கொடுத்த மக்கள் மையத்திற்கும் அதன் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியுரை வாசிக்கப்பட்டது

மாலை 5 மணியளவில் பயிற்சி இனிதே முடியுற்றது.

அறிக்கை தயாரிப்பு
சேப்பாக்கம் கிளை
M. பாக்யலெட்சுமி
ஸ்டாலின் மேரி
M. வளர்மதி
M. வீனா
V. ஜோதி
G.E. மல்லிகா
G. கலைச்செல்வி

# புகைப்படம்

# பட்டறை தொடக்க நிகழ்வு







## முதல் நாள் நிகழ்வு (27-06-2008)











# இரண்டாம் நாள் நிகழ்வு (28-06-2008)









# மூன்றாம் நாள் நிகழ்வு (29-06-2008)









# நான்காம் நாள் நிகழ்வு (30-06-2008)









